**Deposition of Witness**
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 685/2024**

Deposition of PW.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரதீப்குமார் | ஜாதி | : | |
| த/பெ | : | பெருமாள் | தொழில் | : | ஆட்டோ பைனான்ஸ் தொழில், ரியல் எஸ்டேட் மற்றும் பேக்கரி தொழில் |
| கிராமம் | : | தருமத்துப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 30/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.05.2026.

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கிற்கு பின்னிட்டு தான் இவ்வழக்கின் புகார்தாரர் யார் என்று எதிரிக்கு தெரியும் என்றால் சரியல்ல. முன்பே தெரியும். இவ்வழக்குக்கு முன்பு உங்களுக்கும், எதிரிக்கும் தொழில் ரீதியாகவோ, தனிப்பட்ட முறையிலோ எந்த வரவு செலவும் கிடையாது என்றால் சரியல்ல. ரியல் எஸ்டேட் பன்னும்போது நானும், அவரும் சேர்ந்து தான் ரியல் எஸ்டேட் செய்தோம். கடந்த 5 வருடமாக எதிரி எனக்கு பழக்கம். வழக்கிற்கு பின்னிட்டு பேசுவதில்லை. உங்களுக்கும், எதிரிக்கும் வரவு செலவு உள்ளது என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, காசோலையை தாக்கல் செய்துள்ளேன்.

இவ்வழக்கு காசோலையை எதிரி எப்பொழுதும் உங்களுக்கு கொடுத்ததில்லை என்றால் சரியல்ல. எதிரியும், நீங்களும் நண்பர் என்று சொல்லும் நிலையில் நீங்கள் திண்டுக்கல் மாவட்டம்,

தருமத்துப்பட்டியிலும் எதிரி ஈரோடு மாவட்டம், கவுந்தம்பாடியிலும் வசித்து வருகிறீர்கள் என்றால் சரிதான். என்ன அடிப்படையில் ரூ.42,00,000/- ஐ எதிரிக்கு நீங்கள் கொடுத்தீர்கள் என்று உங்களுடைய அறிவிப்பிலோ, வழக்கிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவர் குடியிருக்கும் கவுந்தம்பாடியில் உள்ள காவல்நிலையத்திற்கு பின்புறம் ஒரு இடம் வீட்டோடு இருப்பதாகவும், அந்த இடத்தை வாங்கலாம் என்று எதிரி என்னிடம் சொன்னதன் பேரில் என் பெயரிலும், எதிரி பெயரிலும் சேர்ந்து வாங்குவதற்காக கிரைய தொகையாக நான் எதிரிக்கு இவ்வழக்கு காசோலை தொகையை ரொக்கமாக கொடுத்தேன்.

மேற்சொன்ன சங்கதிகள் எதையும் உங்களுடைய மனுவிலும், முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த பணத்தை வைத்து ரூ.42,00,000/- ஐ எதிரிக்கு கொடுத்தீர்கள் என்றும், பணத்தை எவ்வாறு எதிரிக்கு கொடுத்தீர்கள் என்றும் குறிப்பிட்டு வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். நீங்கள் வருமான வரி செலுத்துபவரா என்றால் இல்லை. உண்மையில் நீங்கள் எதிரிக்கு நண்பர் இல்லை என்றும், வழக்கிற்காக எதிரி உங்களுக்கு நண்பர் என்று பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இவ்வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor